**19.01.2024**
***OS 450/2019 & 397/2021***
**பி.வா.சா.1 தமிழ்செல்வி**
**குறுக்கு விசாரணை:-**

எனக்கு 68 வயதாகிறது. என்னுடைய பிறந்த தேதி 05.03.1955. என்னுடைய பிறப்பு சான்றிதழை காண்பிக்கக்கூடிய ஆவணம் உள்ளது. SSLC சான்றிதழை வைத்துள்ளேன். சான்றிதழை எங்கு வைத்துள்ளேன் என்பதை தேடி பார்க்க வேண்டும். நான் பியூசி வரை படித்துள்ளேன். SSLC சான்றிதழ் உள்ளது. அதற்கு கீழ் உள்ள சான்றிதழ்கள் உள்ளதா என்று ஞாபகமில்லை. எனக்கு 68 வயது என்பதை காண்பிக்கக்கூடிய சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்பதால் என்னுடைய வயதை தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 1974ல் திருமணம் நடைபெற்றது. எனது கணவர் பிறந்தது மதுரை அய்யங்கோட்டை என்றால் சரியல்ல, சித்தாளன்குடி. அது வாடிப்பட்டி அருகில் உள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் 1974லிருந்து எனது கணவருடன் மதுரையில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மத்திய அரசுப்பணியில் National Sample Service -ல் வேலை பார்த்ததால் அவர் மாறுதலாகி சென்ற ஊர்களில் அவருடன் வசித்து வந்தேன். தமிழ்நாட்டில் பல பகுதிகளில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். வாதி ஜெயலெட்சுமிக்கும், பிரதவாதிகளுக்கும் என்ன உறவு என்றால் எனக்கு வாதி சின்னம்மாள் முறை வேண்டும். நான் வாதியின் உறவினர் என்ற விவரத்தை என்னுடைய பதிலுரையில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. திருமணமாகி வெளியில் சென்றுவிட்டதால் எனக்கு உறவுமுறை தெரியாது. நான் சின்னம்மாள் என்று கூப்பிட்டு வந்ததால் சின்னம்மாள் என்ற உறவுமுறை மட்டும் தெரியும். என்னுடைய பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் பிறந்த வருடத்திலிருந்து எங்கள் ஊரில் மற்றவர்களின் வீட்டில் நடந்த விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு நினைவு தெரிந்த நாட்களிலிருந்து விவரங்கள் தெரியும். எனக்கு திருமணமாகி சென்ற பின்னிட்டு சத்திரப்பட்டி கிராமத்தில் எங்கள் ஊரில் உறவினர்களின் வீட்டில் நடந்த விவரங்கள் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. உறவினர்கள் சொல்லி தெரியும். ஊருக்கு வரும்போது உறவினர்கள் சொல்வார்கள். சத்திரப்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்கள் யார்யாருக்கு பாத்தியம், யார்யார் அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் எனக்கு ஓரளவிற்குத் தெரியும். அந்த ஊரில் உள்ள சர்வே எண் சொன்னால் அது யாருடையது என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு தற்போது அந்த அளவிற்கு ஞாபகமில்லை. அந்த சொத்துக்கள் நேரடி விவசாயமா, குத்தகைக்கு கொடுத்துள்ளார்களா என்ற

விவரம் ஓரளவிற்கு தெரியும். என் நிலத்தைப்பற்றிதான் தெரியும். மற்றவர்களின் நிலத்தைப் பற்றி தெரியாது. இந்த சொத்தின் ஆதி பாத்தியஸ்தர்கள் சர்வலிங்ககோனாரும், அவரது மனைவி அழகம்மாளும்தான். அவர்கள் இருவரும் வாதியின் பெரியப்பா, பெரியம்மா என்றால் சரிதான். சர்வலிங்ககோனாருக்கும், அவரது மனைவி அழகம்மாளுக்கும் குழந்தைகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். பூசாரி கோனார், அழகப்ப கோனார் ஆகியோர்களை தெரியும், பார்த்துள்ளேன். பூசாரி கோனாரும், அழகப்ப கோனாரும் சர்வலிங்க கோனாரின் மைத்துனர்கள் என்றால் சரிதான். சர்வலிங்ககோனாருக்கும், அவரது மனைவி அழகம்மாளுக்கும் குழந்தைகள் இல்லாததால் அவருடைய சொத்துக்களை பூசாரி கோனாரும், அழகப்ப கோனாரும்தான் விவசாயம் செய்து வந்தனர் என்று சொல்லியுள்ள நிலையில் எந்த வருடத்திலிருந்து அவர்கள் செய்து வந்தார்கள் என்றால் 1959, 1960ல் விவசாயம் செய்து வந்தார்கள். எதனடிப்படையில் அவ்வாறு விவசாயம் செய்து வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தன்னுடைய அக்கா குடும்பம் என்பதால் அவர்கள் பார்த்து கொண்டார்கள். பூசாரி கோனாரும், அழகப்ப கோனாரும்தான் விவசாயம் செய்து வந்தனர். முதலில் வாய்க்காரல் அடிப்படையில் விவசாயம் செய்து பின்னிட்டு உயிலின் அடிப்படையில் விவசாயம் செய்து வந்தார்கள். என்று என் அப்பாதான் தெரிவித்தார். அந்த விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. பூசாரி கோனாரும், அழகப்ப கோனாரும் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் 1989ல் பார்த்துதான் வாங்கினேன். அந்த ஆவணத்தை நான் கிரையம் வாங்கும்போது அதை வாங்கவில்லை. நம்பிக்கையின் அடிப்படையில் வாங்கினேன். என்னுடைய நிருபணவாக்குமூலத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்க்கவில்லை. பூசாரி கோனாரும், அழகப்ப கோனாரும் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு என்ன என்றால் ஒன்றாக இருந்து விவசாயம் பார்ப்பது. கூட்டு குடும்பம் என்பது ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் ஒன்றாக இருப்பதுதான் கூட்டு குடும்பம் என்றால் சரிதான். பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள் ஒன்றாக இருப்பதுதான் கூட்டு குடும்பம் என்றால் சரிதான். பூசாரி கோனாரும், அழகப்ப கோனாரும் மைத்துனர்களாக சர்வலிங்க கோனாருக்கு இருந்த நிலையில் அவர்கள் எவ்வாறு கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்பதை ஒத்துக்கொள்ள முடியாது என்றால் அவர்களுக்கு குழந்தை இல்லாததால் கூட்டாக இருந்து பார்த்து வந்தார்கள். அவர்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், மாமன், மைத்துனர்கள் கூட்டு குடும்பமாக

வாழ முடியாது என்றும், சட்டப்படி அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்று நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எனக்கு நினைவு தெரிந்த 1965லிருந்து அவர்கள் கூட்டு குடும்பமாக இருந்ததை பார்த்துள்ளேன். நான் அவ்வாறு கூட்டு குடும்பமாக இருந்தார் என்பதை நேரடியாக பார்த்துள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். நிருபணவாக்குமூலம் பாரா 4ல் முதல் 3வரிகளில் பூசாரி கோனார் உழைப்பின் மூலம் வந்த வருமானத்தை வைத்து சர்வலிங்க கோனார் தாவா சொத்துக்கள் உள்பட பல சொத்துக்களை வாங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. என் தகப்பனார் சொல்லிதான் தெரியும். மேற்சொன்ன விவரங்களை என்னுடைய நிருபணவாக்கு மூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை என்னுடைய எதிர்வழக்குரையிலோ, கூடுதல் எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. பூசாரி கோனார் உழைப்பின் மூலம் வந்த வருமானத்தை வைத்து சர்வலிங்க கோனார் தாவா சொத்துக்கள் உள்பட பல சொத்துக்களை வாங்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. என் தகப்பனார் சொல்லிதான் தெரியும். எதிருரை பத்தி5ல் 1960ல் பூசாரி கோனாருக்கு, சர்வலிங்க கோனார் தாவா சொத்தை வாய்கரலாக பிரித்துக்கொடுத்த விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. என் தகப்பனார் சொல்லிதான் தெரியும். 1960ல் எனக்கு 5வயது. அவ்வாறு வாய்கரலாக பிரித்து கொடுத்ததற்கு ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை. அவ்வாறு ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. 1989ல் தாவா சொத்தின் ஒரு பகுதியை நான் கிரையம் வாங்கினேன், 60செண்டாகும். நான் வாங்கிய 60 செண்டைதான் 2ம் பிரதிவாதி கிரையம் 1990ல் வாங்கினார். அவ்வாறு நான் வாங்கிய கிரைய பத்திரத்திலோ, 2ம் பிரதிவாதி வாங்கிய கிரைய பத்திரத்திலோ அம்மாபிள்ளை கிரையம் கொடுத்ததாக கண்டுள்ளது. அவர் பூசாரி கோனாரின் மனைவி. நான் வாங்கிய கிரைய பத்திரத்திலும், 2ம் பிரதிவாதி வாங்கிய கிரைய பத்திரத்திலும் அம்மாபிள்ளை அம்மாளுக்கு பூர்வீக பாத்தியமான சொத்து என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் 3 பத்திரங்களில் அம்மாபிள்ளை அம்மாளுக்கு பூர்வீக பாத்தியமான சொத்து என்று சொல்லியுள்ளார்கள் என்றும், என் கணவருக்கு சுயார்ஜித சொத்து என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் 3பிரதிவாதிகளும் பொதுவான

எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என்னுடைய முதல் எதிர்வழக்குரை பத்தி 8-ல் 12.05.1976ம் தேதியிட்ட உயில் சாசனப்படி சர்வலிங்க கோனார் பூசாரி கோனாருக்கு பாத்தியப்படுத்தி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். என்னுடைய முதல் எதிர்வழக்குரை பத்தி 5-ல் தாவா சொத்தை வாய்கரலாக கொடுத்தாக சொல்லிவிட்டு பத்தி-8ல் பூசாரி கோனாருக்கு உயில் மூலம் பாத்தியப்படுத்தியதாக முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முதலில் வாய்கரலாக பேசப்பட்டு, பின்னிட்டு உயில் மூலம் பாத்தியப்படுத்தப்பட்டது. உயில் பற்றி என்னுடைய எதிருரையில் சொல்லியுள்ள விவரங்கள் முற்றிலும் தவறானது என்றால் சரியல்ல. பூசாரி கோனாருக்கு தாவா சொத்து வாய்கரலாக பாத்தியப்படுத்தப்பட்டதா, உயில் மூலம் பாத்தியப்படுத்தப்பட்டதா என்பதை சொல்லக்கூடிய நபர்கள் ஊரில் இருக்கிறார்கள். 1960ல் வாய்கரலால் மூலம் பாத்தியப்படுத்தப்பட்டது என்று சொல்வதும், 1976ல் உயில் மூலம் பாத்தியப்படுத்தப்பட்டது என்று சொல்வதும், முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 10.06.1960ல் குத்தகை ஒப்பந்த பத்திரம் மூலமாகத்தான் பூசாரி கோனாருக்கு தாவா சொத்தில் உழவடை அனுபவம் கிடைத்தது என்றால் அது தவறு. அவ்வாறான உழவடை ஒப்பந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞரும் சொல்லவில்லை. எதனடிப்படையில் உழவடை ஒப்பந்த பத்திரத்தை பார்க்காத நிலையில் அது தவறு என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் என் அப்பா சொன்னதை வைத்து சொல்கிறேன். எனக்கு நேரடியாகத் தெரியாது. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் உழவடை ஒப்பந்த பத்திரத்தை சட்டப்படி நிருபிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன். எதனடிப்படையில் சட்டப்படி நிருபிக்கவில்லை என்று சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. குத்தகை பதிவு அலுவலர் ஒரு வா.சா.ஆ.7படி அறிவிப்பை அனுப்பியுள்ளார் என்றால் அது பொய். அது தாவா சொத்திற்கான ஆவணம் என்றால் இல்லை. இந்த சொத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல. வா.சா.ஆ.7. சொத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல என்பதை நிருபிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இல்லை. வா.சா.ஆ.7. தாவா சொத்திற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்பதை காட்டக்கூடிய வேறு ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் அடங்கல் நீதிமன்றத்தில் சா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி ஆவணத்திற்கு ஆட்சேபனையோ, அந்த

ஆவணத்தை தாக்கல் செய்த நபரையோ குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் அதை பற்றி விவரம் எனக்குத் தெரியவில்லை. சா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி ஆட்சேபனையோ, குறுக்கு விசாரணையோ செய்யவில்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள மொத்த சொத்து 2 ஏக்கர் 25செண்டிற்கு குத்தகைதாரராக அம்மாபிள்ளை பெயர் காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. எனக்கு தெரிந்து அவர் குத்தகை ஏதும் செய்யவில்லை. பூசாரி கோனார் தாவா சொத்தின் உரிமையாளர் என்பதற்கோ, அவர் உரிமை பாத்தியத்தில் அனுபவித்து வந்தார் என்று சொல்வதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உயிலில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. உயில் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்குத் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டுதான் தெரிய வந்தது. உயிலின் அடிப்படையில்தான் கிரையம் பெற்றேன். பி.வா.சா.ஆ.1 பத்திரத்தில் 1976 உயில் அடிப்படையில்தான் பூசாரிகோனாருக்கும் அதன் பின்னிட்டு அவரது மனைவிக்கும் பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பூர்வீகம் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. அழகம்மாளின் தங்கை பெயர் ஆரம்மாள். இந்த வாதி ஆரம்மாளின் சொந்த மகள் என்றால் சரிதான். 1958ல் சர்வலிங்க கோனாரின் குடும்பத்தில் என்னென்ன விசயங்கள் நடைபெற்றது என்ற விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். 1958ல் சர்வலிங்க கோனார் வாதியை தத்தெடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் மேற்படி சுவிகாரம் ஏதும் எடுக்கவில்லை என்று சொன்னார். அவ்வாறு என் தந்தை சொன்னார் என்ற விவரத்தை எதிருரையில் சொல்லவில்லை. 1958ல் சர்வலிங்க கோனார் வாதியை மகளாக தத்தெடுத்தார் என்றும், நான் வழக்கிற்காக அவ்வாறு சுவிகாரம் ஏதும் எடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சிறுபிள்ளையாக இருந்த காலத்தில் சத்திரப்பட்டி கிராமத்தில் சர்வலிங்க கோனார் வீட்டில்தான் வசித்து வந்தார் என்றால் எல்லா பிள்ளைகளும்தான் இருந்தனர். மேற்படி விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. வாதி சர்வலிங்க கோனார் வீட்டில்தான் வசித்து வந்தார் என்றும், அதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக அதை மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் பெற்றோர்கள் மதுரை வடக்குமாசிவீதியை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதியின் பெற்றோர்கள் மதுரை வடக்குமாசிவீதியில் இருந்தாலும் வாதி சர்வலிங்க கோனார் வீட்டில்தான் வசித்து வந்தார் என்றால் இல்லை. எப்போதாவதுதான் வருவார். வாதி சர்வலிங்க கோனார் வீட்டில் இருந்தபோதுதான் அவருக்கு சடங்கு, திருமணம் முதலிய

விசேசங்கள் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்குத தெரியாது. மேற்படி வாதிக்கு சர்வலிங்க கோனார்தான் சடங்கு, திருமணம் முதலிய விசேசங்கள் நடத்திவைத்தார் என்றும், இந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக அதை மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வலிங்க கோனார் மற்றும் அழகம்மாள் இறந்தபின்னிட்டு வாதிதான் அவர்களது சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் அனுபவித்து வருகிறார். அழகப்பகோனாரின் பிள்ளைகளை விரட்டிவிட்டுதான் அனுபவித்து வருகிறார். அழகப்பகோனாரின் பிள்ளைகளை விரட்டிவிட்டுதான் அனுபவித்து வருகிறார் என்ற விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அவசியம் இல்லை என்பதால் சொல்லவில்லை. அவ்வாறு எப்போதிலிருந்து அழகப்பகோனாரின் பிள்ளைகளை விரட்டிவிட்டு வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சுமார் 40 வருடமிருக்கும். அவ்வாறு அழகப்பகோனாரின் பிள்ளைகள் இது சம்மந்தமாக வாதி மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் சிறுபிள்ளைகளாக இருந்ததாலும், அவர்களுக்கு யாரும் ஆதரவு அளிக்கவில்லை என்பதாலும் நடவடிக்கை எடுக்கவில்லை. அழகப்பகோனாரின் பிள்ளைகள் இது சம்மந்தமாக வாதி மீது எவ்வித நடவடிக்கையும் ஏன் எடுக்கவில்லை என்றால் வாதியை சர்வலிங்க கோனார் சுவிகாரம் எடுத்துக்கொண்டதால்தான் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது பொய். நான் சத்திரப்பட்டி கிராமத்தில் பிறந்து வளர்ந்ததால் எனக்கு இந்த விவரங்கள் நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மதுரையில் படித்து வந்தேன். வா.சா.ஆ.1 சர்வலிங்க கோனார் வாதியின் சடங்கிற்கு அடித்த பத்திரிக்கை என்றால் அடித்துள்ளார். வா.சா.ஆ.2 வாதியின் திருமணத்திற்கு கொடுத்த திருமண ரசீது என்றால் அது தத்து மகள் என்று கொடுக்கவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் 2 வாதியும், சர்வலிங்க கோனாரும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.2 ரசீதில் பூசாரி கோனார் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் கண்ணாடி இல்லாமல் படிக்க முடியவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்று சொல்லியுள்ளேன். இவ்வழக்கு 2019ல் போடப்பட்டது. 2019 வழக்கிற்காக 1955ல் மேற்படி ஆவணங்களை உற்பத்தி செய்திருக்க முடியுமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் என்றும், அதை நான்தான் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சர்லிங்ககோனாருக்கு, வாதி சுவிகார மகள்

என்பதால்தான் மேற்படி ஆவணங்கள் சர்வலிங்ககோனார் பத்திரிக்கை அடித்து சடங்கு விசேசங்கள் நடத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்